Subscription Rs 1 50
Postage to Ceylon & India 50
do Straits 75

Advertising
do
do per column

Hindu Organ

VOL 5. / ரு-ம்புத்தகம். | JAFFNA, WEDNESDAY FEBRUARY 21. 1894 | இந்துசாதனம். | கலியுகவருஷம் சஅகூரு சஅகூச, பெப்ருவரிமீ உகவ, | NO 14 / இலக் கச

PUBLISHED EVERY OTHER WEDNESDAY. பக்ஷத்துக்கொருமுறை புதன் கிழமைகளிற் பிரசரிக்கப்படும்.

WARD AND DAVY

Chemists, Druggists, Stationers, General Merchants & Agents
Jaffna

JUST RECEIVED

Per S. S. "Booldana"

	Rs Cts
Easton Syrup 4 oz size	1/12½
Best Lemonade Powder per drm (one dram of this with sugar water makes a bottle of best Lemonade water.)	/7
Saffron Crocus (*Best French*)......	/50
Pepsine Wine(*BestEnglish*)	3/00
Woollen shawls (7½×4½)............	4/75
Blue Black 1 oz size writing Ink per doz	/37½
Rodger's Penknives No. 6. do single blade	/75
do double do	1/50
Combination Penholders doz... ...	/30
Colmans Mustard tins	/50
Vinolia Soaps	/57

இங்கிலிஸ் கடலைவாயிரச் சோடி. சுத்த வெண்மையான நீருள்ளது. குற்றம் சிறிதுமில்லாதது (ஒன்றேமுக்கால் கிறுத்து) ரூ 150/- குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி என்பவைகளோடு சகலவித இங்கிலிஷ் மருந்துகளுமிருக்கின்றன. காலலர்வீதி, வண்ணார்பண்ணை

☞ TERMS STRICTLY CASH.

NOTICE.
CHOLERA TINCTURE.

THE TINCTURE has no rival either as a preventive or specific in CHOLERA of every description. The only unfailing and reliable Remedy. Arrests Cholera at any stage, has never been known to fail.

Order a bottle *at once* and thus guard yourself against this fatal scourge.

PRICE (*including box and packing*) One Rupee only.

DISCOUNT TO TRADE AND LARGE BUYERS

Sole Agents for India.
TURNER & ROBERTSON.
LUCKNOW (OUDH)

MAGNIFICENT SINGLE STONE DIAMOND
RING.

Selected Brilliant of Exceptional Purity Hardness and Lustre.

These RINGS are warranted EQUAL in appearance and wear to an 18-Carat Gold-mounted Brilliant Ring costing £25, and to which it bears so perfect a resemblance that experts have frequently been deceived. The mount is of gold-cased alloy beautifully finished and of such similarity to bright 18 carat gold that it is practically impossible to determine that it is other than the genuine article it is intended to present.

PRICE Rs 10–Cash or V. P. P.
TURNER & ROBERTSON.
LUCKNOW (OUDH).

THE HINDU ORGAN.

JAFFNA, WEDNESDAY FEBRUARY 21, 1894.

THE WATER SUPPLY OF THE TOWN OF JAFFNA.

We desire to revert to the subject of the Public Health and Improvement of Jaffna, and would deal first and foremost with the matter of our Water Supply. But we are met with the startling fact that we have no water supply worth speaking of at all. The drinking water of the population is got in some cases from the wells of the best local repute, and in others—alas too often—from the worst. Now, perhaps, there is no more powerful factor in the dissemination and propagation of disease than water; and the promiscuous drinking of water obtained from questionable sources, regardless of its impurity, and the many sources of contamination with which it is surrounded, is one of the greatest dangers to which the public can be exposed. In the name of the Jaffna public which is thus obliged to court untold danger, we ask, why is it that the question of a Water Supply for Jaffna is neglected? We are aware that the very best water in the place is not free from organic contamination and that like everything terrestrial its capacity too is limited, to meet more than the wants of the immediate neighbourhood. What then must be the intensity of the poison the rest of our population, e-g, the throngs of Karayur imbibe daily? We urge most strongly the need of a proper investigation into this subject. It is incumbent on the Government to take the question up, if the local authorities with an overweening confidence think that it needs no attention because all goes well. We sound the note of warning, and may it not be unheeded, until the results of a contaminated water supply rouse our attention, but when it is too late! This is one ground for the establishment of a Local Board of Health and Improvement, and we do not hesitate in asserting that it is criminal negligence on the part of those in authority to let poisoned water continue to be used in a crowded town such as Jaffna, where the outbreak of disease in an epidemic form will most assuredly mean the greatest havoc among the inhabitants of our town.

SUPREME COURT CRIMINAL SESSIONS, JAFFNA.

The first Criminal Sessions [illegible] the longest sessions for several year[illegible] menced on the 10th instant, His Lordship the Chief Justice being the presiding Judge, Mr. Grenier acting as Registrar, Mr. Cook as Crown Counsel, Mr. White as Private Secretary to His Lordship and Mr. Kailasapillai as Tamil Interpreter.

The only case taken up that day was No. 7 in the Calendar from Pt. Pedro in which the prisoner was charged with uttering a counterfeit currency note of the value of Rs. 10 knowing the same to be counterfeit. An English speaking Jury with Mr, A. Mailvaganam as foreman was called to try this case. Mr. Advocate Nagalingam defended the accused. Six witnesses were called for the prosecution and the Counsel for the defence having addressed the jury, His Lordship summed up for conviction. The jury, however, being not satisfied with the evidence, returned a verdict of "not guilty." The Chief Justice on learning from the foreman that the verdict was not a unanimous one directed the jurors to reconsider their verdict. But they returned with the same verdict after a few minutes further deliberation, and the prisoner was discharged

Two cases were disposed of on Monday the 12th instant The first case taken up was No. 6 in the Calendar from Pt. Pedro. The prisoner in this case was charged with uttering a counterfeit note knowing the same to be counterfeit. Mr Nagalingam defended. An English speaking jury with Mr. Mailvaganam as foreman tried the case which ended in the acquittal of the prisoner.

Case No. 8 also from Pt, Pedro was then called. The prisoner Sinnatamby Supper was indicted for murder. Mr. Nagalingam defended. The English speaking jury who tried this case returned a verdict of guilty of culpable homicide not amounting to murder. The prisoner was thereupon sentenced to ten years rigorous imprisonment.

On the 13th instant only one case was taken up, viz No. 5 in the Calendar from Pt. Pedro. in which two men of Tunnalai were charged with grievous hurt. Mr. Nagalingam defended the accused who were acquitted by an English speaking jury of which Mr. Mailvaganan was foreman.

On the 14th instant case No. 1 was taken up before an English speaking jury with Ellankainayaga Mudaliyar as foreman. This was a case from Mannar and the prisoner, a Vedhan, was charged with taking a gratification other than legal remuneration in respect of an official act. Mr. Nagalingam instructed by Mr. Proctor Casipillai, defended the accused, who was convicted and sentensed to pay a fine Rs. 200.

The prisoner in case No 13 from Kaits was then put in the dock, charged with culpable homicide not amounting to murder He pleaded guilty to the charge and sentence was reserved.

The third case taken up that day was No. 11 in the Calendar in which an Arab diver was charged with rape. He was not defended by Counsel. The evidence being not satisfactory the jury found him not guilty and he was discharged.

On the Court reassembling on the 15th the prisoner who pleaded guilty to the charge of culpable homicide not amounting to murder the previous day was sentenced to eighteen months' rigorous imprisonment.

The Uduvil murder case was then taken up before an English speaking jury of which Mr. Mailvaganam was foreman. In this case one K[illegible]iran M[illegible] Changuvaly was charg[illegible] of Valu Murugan of

உ

கணபதிதுணை.

வாழ்கவந்தணர்வானவரானினம்......... ......*
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக ... ...*
ஆழ்கதீயதெல்லாமரனாமமே...... ....*
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே.... ....*

விளம்பரம்.

அறியான்வினா வினவிய C. M. க்கு அறிவிடை.

அறியான்வினா என்னு முகவுரையையுடைய வசனத்திலே அத்திபாரம் போடும்பொழுதே விநாயகராலயத்துக்காம் கிரமங்களை நடாத்தி என்பது முதலிய சிலவசனங்கள் உண்மைக்கு முழுமாறே சற்றேகாட்டுதும்.

காசியிலிருந்து வாணலிங்கம் அழைப்பித்து இனிச் சிவப்பிரதிஷ்டை செய்விப்பதென்று நிச்சயித்தே விக்கினேஸ்வர வாலஸ்தாபனம் செய்து திருநிருமூலையிலே விக்கினேஸ்வராலயத்துக்கு அத்திபாரம் நியமித்து அதன்மேலே சிவாலயத்துக்கென்று சைவாகமங்களிலே விதிக்கப்பட்டபடியே, அத்திபாரம் போடுவித்துக் கட்டப்பட்டுள்ளது. இவ்வாறேயன்றி, அறியான்வினாவிலே, முற்பகுதியிலே காட்டியபடி விநாயகராலயமாக நியமித்துக் கட்டப்படவேயில்லை. மேலே சொல்லியபடி கட்டப்பட்ட சிவாலயத்திலே அச்சிவலிங்கப்பிரதிஷ்டை செய்யவும் செய்விக்கவும் யாதுந் தடையில்லையே. இனி முன் அவ்விருந்த தானத்துக்குத் தென்மேற்கே பிறிதோராலயம் புதிதாயமைத்து, அதிற்பிரதிஷ்டை செய்துவைக்க விதியாகுமோவென்பதற்கு விடை வருமாறு. C. M. மே ஆகமங்களிலே முகூர்த்தவிதானப்படலத்திலே ஓர் ஆலயத்திலே இருக்கின்ற மூர்த்தியை இன்னுமோராலயத்திலே ஸ்தாபிக்கும்பொழுது, திக்சூலம், யோகினிபார்த்தே, செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருத்தலாலும், இன்னுமிவ்விஷயத்திலே நூறு விற்கிடை இருநூறு விற்கிடை வரையிலே ஆலயம் செய்யலாமென்று விதிக்கப்பட்டிருத்தலாலும், இன்னும் வாலஸ்தாபனமென்று நீரறிந்த விஷயத்திலே அவ்விதி உண்மையினாலும் தடையின்றிச் செய்யலாம். இன்னுமிதற்கு, பிரமாணங்கள் அநேகமுள்ளன. அவை காட்டப்புகின் இடம்பெறுமெனச் சுருக்கிவிட்டனம். நன்றாய்ச் செய்யலாமென்பதை இதனாலறிந்துகொள்க.

விஜயஸு மாசிமீ } இங்ஙனம்
சு. கார்த்திகேசஜோதிஷர்.

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: விசயஸு மாசிமீ ௧௪௳.

தருமகர்த்தாக்கள் கவனிக்க வேண்டியது.

நிலையில்லாத இவ்வுலகத்திலே நிலையாயுள்ளது நிலையாமையேயென்பதைச் சமயநூல் நீதிநூல் முதலியவைகளால் நன்கு அறிந்தோமாயினும், வெகுசீக்கிரத்தில் அதனை மறந்துவிடுகின்றேம். நீரிலுண்டாவதாகிய குமிழியைக் கண்டவுடன் அதற்குப் பூண்செய்விக்கத் தட்டானிடஞ் செல்பவன்போல நிலையில்லாத இவ்வுடம்பை நிலையென மதித்துப் பேணி அதனைப் போஷித்தலிலேயே பெரும்பாலும் நமது காலத்தைப் போக்குகின்றேம். 'வினைப்போகமேயொரு தேகங்கண்டாய் வினைதானொழிந்தாற் றினைப்போதளவு நில்லாது கண்டாய்' எனவும் 'நெருநலுளனொருவனின்றில்லையென்னும் பெருமை' எனவும் ஆன்றோர் அருளிய வாக்குக்களையெல்லாம் மறந்துவிடுகின்றோம். சரீரத்தின் நிலையாமையை அறிந்து துறவு வேண்டும் வேண்டுமென்று போதித்தவர் இந்துக்களேயாகவும், துறவுபூண்டவரும் இந்துக்களேயாகவும், இப்போதுள்ளவர்கள் இதனைச் சிறிதுஞ் சிந்திக்கிறார்களில்லை. ஐரோப்பியருக்கு உள்ள ஞானம் இவர்களுக்கு இல்லை. சில கிறிஸ்தவர்கள் பிரசங்கங்கள் செய்யும்போது, இந்துக்கள் கிறிஸ்துவை நம்பாமையினாலே அவர்கள் மரணகாலத்திலே படும் வேதனைகள் சொல்லி முடிவனவல்லவென்றும், கிறிஸ்தவர்களோ ஒருகிலேசமுமற்றவர்களாய்ப் பூரணவானந்தத்தோடு இறக்கிறார்களென்றும், பிரசங்கிக்கிறார்கள். உண்மையை நோக்குபவர் இது முழுதுமபத்தமென்று காண்பர். நம்முடையவர்கள் எவ்வளவு எவ்வளவு புண்ணியங்களைச் செய்தவர்களாயினும், தாம் பிறந்தவன்றே இறக்குமியல்புடையவரென்பதை நினையாமல், தம்முடைய அசைவற்ற அசைவுள்ள ஆதனங்களுக்கு ஒரு பொறுப்புச் செய்யாதவராயும், கணக்கு முதலானவைகள் ஒழுங்காக வைத்திராதவர்களாயும், நம்பிக்கைப் பொருளுக்கும் சொந்தப்பொருளுக்கும் ஒருபேதமுங் காட்டாதவராயும் தம்முடைய காலத்தை ஒருவாறு கழித்துக்கொண்டுவருகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு மரணகாலத்தில் நிகழுவன என்ன? அந்த ஆதனத்துக்கு எந்த எந்தப் பிள்ளைகள் சண்டையிடுகிறார்களோ, ஆரார் வழக்குச் சொல்லுகிறார்களோ, எவனெவன் தரவேண்டிய பணத்தைத் தராமல் எடுத்துக்கொள்ளுகிறானோ, அந்தப் பணத்துக்கு யாதொரு பொறு[illegible]யே, இன்[illegible] டம் வாங்கிய பணத்தைக் [illegible] பெருமையால் அவன் மற[illegible] தொடருவானோ, என்று இவை[illegible]

ளே அவருடைய மனசில் அந்தநேரத்தில் நிகழும். வற்றால் ஐந்துவிநாடியிற் பிரிந்துவிடும் உயிரும் ஐ[illegible] நாளைக்குக் கிடந்து வேதனையடைகின்றது. [illegible] பியர் முதலானவர்களுக்கோ இக்கிலேசங்க[illegible] வர்கள் பிறந்தபோது அழுது இறந்தபோ[illegible]ரிப்பார்கள். அவர்கள் மரணத்துக்கு எப்போதும் ஆயத்தமாயிருக்கிறார்கள். மரணம் வருகிறது தான் தாமசம், வந்தவுடன் போக நல்ல ஆயத்தம். மரணசாசனம் எழுதுகிறது ஒருதுர்க்குறி என்பது நம்மவர் பலருடைய கருத்து. மரணசாசனம் என்பதை நினைக்கவும் அவர்களுக்கு ஒருவகையான அச்சமுண்டாகின்றது. அதனால் அவர்கள் அதை நினைக்கவும் விரும்புகிறதில்லை. இங்கிலிசுச் சட்டத்திலோ மரணசாசனம் ஒருதரம்போல, அவனவனுடைய நிலையும் மனமும் வேறுபடுகிறதற்குத் தக்கபடி, நூறுதரமும் எழுதலாமென்று விதித்திருக்கின்றது. மரணசாசனம் சொத்தாரிசுமாரையின்றியும் எழுதலாமென்றிருக்கின்றது. சடுதியில் ஒருவன் மரணசாசனம் எழுதவரினும் வருமென்பதைக் குறித்து அதற்கு முத்திரையும் அவசியமில்லையென்று விதித்திருக்கின்றது. இப்படியெல்லாமிருந்தும் நம்மவர் பலர் தங்கள் முடிவான கருத்தை வெளிப்படுத்த அஞ்சுகின்றார்கள்.

இவ்விஷயத்தை எழுதும்படி ஏவியது, ஸ்ரீ. சின்னத்தம்பியுடையாருடைய மரணமே. இவர் நல்ல தனவந்தராயிருந்தும், வீமன்காமத்திலொன்றும் காங்கேயன்துறையிலொன்றுமாக இரண்டு சைவவித்தியாசாலைகளைத் தாபித்தும், இவற்றிற்குத் தம்முடைய ஆதனத்தில் ஒருபங்கு கொடுப்போமென்று பலமுறை பேசியிருந்தும், அவற்றுள் ஒரு வித்தியாசாலைக்கு ஊரவர்களிடம் கூட்டம் கூட்டிப் பணம் வாங்கிவைத்திருந்தும், இவைகளொன்றற்கும் ஒருபொறுப்புஞ் செய்யாமல் சடுதியில் இறந்துவிட்டார். அந்தநேரத்தில் ஆயத்தஞ் செய்தார். செய்ததென்ன. 'நாச்செற்று விக்குண்மேல் வாராமுன் நல்வினை மேற்சென்று செய்யப்படும்' என்ற அருமருந்தன்ன வாக்கை உயிரோடிருக்கும்போது அலக்ஷியஞ் செய்கிறவர்களுக்கு உண்டாகுங் கதியே உடையாருக்குங் கிடைத்தது. பேசக்கூடாமற் போயினார். இவருக்கு இவ்வித்தியாசாலைகளிலிருந்த ஆசை ஒருபிதாவுக்குப் பிள்ளைகளிலிராது. உபாத்தியாயருடைய கூட்டத்தைப் போனமாசம் தம்முடைய பள்ளிக்கூடத்திற் கூட்டியபோது அவருக்கிருந்த ஆராமை யாரைத்தான் புகழவிடவில்லை. அப்படிப்பட்டவருக்குத் தம்முடைய கருத்து நிறைவேறாமையால் மரணகாலத்தில் எவ்வளவு வேதனையுண்டாயிருக்கும். ஈசுரனே அதற்குச் சான்று.

இனி அவருடைய கருத்தை அவருடைய மனைவி மைந்தர் தமையன் தம்பி முதலான சுற்றத்தவர்களே முற்றுப்பெறுவிக்கவேண்டும். உடையாருக்குக் கலியாணஞ் செய்ததினாலே கீர்த்தியுண்டாகவில்லை; பிள்ளைப் பெற்றதினாலே கீர்த்தி உண்டாகவில்லை; உடையார் வேலையினாலே அவ்வளவு கீர்த்தியுண்டாகவில்லை. இப்பள்ளிக்கூடங்களை உண்டாக்கினதினாலேயே பெருங் கீர்த்தியுண்டாயிற்று. அதனை அவருடைய சுற்றத்தார் நிலைநாட்டுங் கடமைப்பாடுடையர். இது ஒரு நல்லசமயமென்று சில கிறிஸ்தவர் வேறு மாறுமுயற்சி செய்வதாகவுங் கேள்விப்படுகிறோம். அவர்க்கது இயல்பான குணம். இறந்தவரிடத்து உண்மையான விசுவாசம் இச்சுற்றத்தாருக்கு இருக்குமாயின், அவருடைய முயற்சிகளெல்லாம் உவர்நிலத்து வித்துப்போலாகும்.

ஸ்ரீ. சின்னத்தம்பியுடையாருடைய மரணத்தைக் கோயிற்றருமகர்த்தாக்கள் ஆதீனகர்த்தாக்கள் வித்தியாசாலாதிபதிகள் மடாதிபதிகள் முதலாகப் பொதுத் தருமங்களைச் செய்தவர்களும் நடத்துபவர்களும் சிந்திக்கக்கடவர். மரணம் கள்ளனைப் போல வருமென்று பழமொழி சொல்வார்கள். பொதுத்தருமங்களையொருவன் எப்பொழுது செய்யத் தொடங்குகின்றானோ, பொதுத்தருமங்களுக்கு ஒருவன் எப்பொழுது சுவாதீனபதியாய் வருகிறானோ, அப்பொழுதே அவன் தனக்குப் பின்னே அது எப்படி நடத்தப்படவேண்டுமென்பதற்கு ஏற்பாடும், நடத்துபவரிலக்கண மிவையென்றும், அவர் நடத்துமாறு இதுவென்றும், ஒழுங்குகள் செய்துகொள்ளல் வேண்டும்.

சுப்பிறீங்கோடு.

இக்கோட்டுக் கிறிமினல் விசாரணை சென்ற ௧௦௳ சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் முதனீதிபதியா லாரம்பிக்கப்பட்டது.

அன்று பருத்தித்துறைக் கோட்டிலிருந்து வந்த கள்ளநோட்டுவழக்கு விசாரிக்கப்பட்டு எதிரி விடுதலை பெற்றனன். ௧௨௳ திங்கட்கிழமை டிை குற்றமேசார்த்தி டிை கோட்டிலிருந்து வந்த வழக்கும், டிை கோட்டிலிருந்து வந்த கொலைவழக்கும் விசாரிக்கப்பட்டன. முதல் வழக்கில் எதிரி விடுதலையும், மற்றவழக்கில் எதிரி ௧௦ வருஷக் கடுஞ்சிறையும் பெற்றனர். ௧௩௳ டிை கோட்டிலிருந்து வந்த சண்டைவழக்கில் எதிரிகள் விடுதலைபெற்றனர். மற்றைநாள் (௧௪௳) மன்னார் விதானை கைக்கூலி வாங்கின வழக்கும், ஊர்காவற்றுறைக் கோட்டிலிருந்து வந்த கொலைவழக்கும், அராபியொருவன்மேல் சார்த்தப்பட்ட வியபிசாரவழக்கும் விசாரிக்கப்பட்டபோது, முதல்வழக்கில் எதிரி ௨௦௦ ரூபா தண்டமும், இரண்டாம் வழக்கில் எதிரி ௧௮ மாசக் கடுஞ்சிறையும், மூன்றும் வழக்கிலெதிரி விடுதலையும் பெற்றனர். மற்றைநாள் உடுவிற் கொலைவழக்கு விசாரிக்கப்பட்டபோது எதிரி கொலைத்தீர்ப்புப் பெற்றனன். அன்று, பின்விசாரிக்கப்பட்ட காரைதீவுக் களவு வழக்கில் மற்றைநாள் எதிரி விடுதலைபெற்றனன். சாவகச்சேரிக் கோட்டினின்றும் வந்த களவுவழக்கில் எதிரிகள் தனித்தனி ஆறுமாசக் கடுஞ்சிறை விதிக்கப்பெற்றனர். மற்றைநாள் [illegible]க்கப்பட்ட புலோலிக் கள்ளக்கையெ[illegible] முதலெதிரிக்கு ௫௦௦ ரூபா தண்டமும் [illegible] மாசக் கடுஞ்சிறையும்; மற்றை ஐவருக்[illegible]ம் விதிக்கப்பட்டது. நேற்று மாதகற்

[illegible]க்கு ரூபா ௧ ௫௦

[illegible]டைவழக்கில் எதிரிகள் ௧௧ பேர் விடுதலைபெற்ற[illegible]

[illegible]வ இந்தப் பன்னிரண்டு வழக்கில் எதிரிகள் குற்றவாளிகளெனக் காணப்பட்ட வழக்கு ஆறு; விடுதலைபெற்ற வழக்கு ஆறு. இவற்றுள் அப்புக்காத்து மெஸ் அளைக்கோன் வெளிப்பட்டது ஒன்று; ஸ்ரீ. நாகலிங்கம் வெளிப்பட்டது ஆறு; ஸ்ரீ. கனகசபை வெளிப்பட்டது ஒன்று; ஸ்ரீ. முத்தையா வெளிப்பட்டது ஒன்று; நாகலிங்கமும் கனகசபையும் வெளிப்பட்டது ஒன்று. அளைக்கோன் வெளிப்பட்டதில் எதிரி குற்றவாளி; நாகலிங்கம் வெளிப்பட்ட ஆறில், மூன்றில் எதிரிகள் குற்றவாளி, நாலில் எதிரிகள் விடுதலைபெற்றனர். கனகசபை வெளிப்பட்டதில், ௫ எதிரியில் ஒருவனொழிய நால்வர் குற்றவாளி; முத்தையா வெளிப்பட்டதில் எதிரி விடுதலைபெற்றனன். கனகசபையும் நாகலிங்கமும் வெளிப்பட்டதிலுள்ள ஐந்து எதிரிகளில் நாலுபேருக்காக நாகலிங்கமும், ஒருவனுக்காகக் கனகசபையும் வெளிப்பட்டனர்; இதில் நால்வரில் ஒருவன் மாத்திரம் குற்றவாளி.

இம்முறை கூட்டப்பட்ட சுப்பிறீங்கோட்டுக்கு ஸ்ரீ. சிற். கைலாசபிள்ளை துவிபாஷிகராய் வந்தனர்.

உ

சிவமயம்

வைதிகசைவசுத்தாத்துவித

சைவசித்தாந்த சமயஸ்தாபனம்.

[காசியிலிருந்து ஸ்ரீமத். சி. செந்திநாதையரவர்கள் எழுதியனுப்பியது]

தேவாரம்.

நல்லராற்றவு ஞானநன் குடையர்
   தம்மடைந்தவர்க் கருளீய
வல்லர்பார்மிசை வான்பிறப் பிலர்
   மலிகடன் மாதோட்டத்
தெல்லையில்புக ழெந்தைகே தீச்சர
   மிராப்பக னினைந்தேத்தி
யல்லலாசறுத் தரனடி யிணைதொழு
   மன்பராமடி யாரே.

காஞ்சிப்புராணம்

பேயன்னபுறச்சமயப் பிணக்குநூல்
   வழியனைத்தும் பிழையேயன்றி
வாயன்மைதெளிந்துசைவ சித்தாந்த
   வழிதேறியதிசவாழ்விற்
போயன்மியஞ்செழுத்தார் திருநீறு
   கண்டிகையும்பொருளாக்கொண்ட
தாயன்மார்திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும்
   பெறும்பேறுநான்பெற்றேனால்.

தணிகைப்புராணம்

பாயவாருயிர்முழுவதும்பசுபதியடிமை
யாயவெவ்வகைப்பொருள்களுமவனுடைப் பொருள்க
மேயவிவ்வணமலதுவேறின்மெனவுணர்ந்த   [ன்]
தூயமெய்த்தவத்தடியவர் துணையடிதொழுவாம்.

பூமேவு பொன்னுலகுக்கு முகமாயமைந்தது பரதகண்டமெனப்படும் இந்தியாதேசம். இவ்விந்தியாவிலே பண்டுதொட்டு வழங்கும் சமயங்கள், புறப்புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், அகச்சமயமென்னும் நாற்கூற்றிலடங்குவனவாம்.

௧. "உலோகாயதனும், நால்வகைப் பௌத்தரும், ஆருகதனும் ஆகிய அறுவரும் வேதசிவாகமங்களை நிந்திக்கும் நாஸ்திகராயினும், ஒருநூலென்றும் பிரமாணமென்றுங் கொண்டு ஒருநெறிகண்ணே நிற்றலால் அவர்சமயம் புறப்புறச்சமயமெனப்படும்.

௨. "தார்க்கிகர், மீமாஞ்சகர், ஏகான்மவாதி, சாங்கியர், யோகர், பாஞ்சராத்திரர் என்னும் அறுவரும் வேதத்தைப் பிரமாணப்பொருளாகக் கொள்ளினும், அவருள்ளே தார்க்கிகர் அது தன்னாற் பிரமாணங்கொள்ளாமையானும், வேதப்பொருளோடு முரணிப் பொருட்டன்மை கோடலானும், மீமாஞ்சகர் கருமகாண்டமாகிய வேதமாத்திரைக்கே பிரமாணங்கொண்டு ஞானகாண்டமாகிய உபநிடதங்களை இகழ்தலானும், ஏகான்மவாதிகள் ஞானகாண்டமாத்திரைக்கே பிரமாணங்கொண்டு கருமகாண்டத்தை இகழ்தலானும், ஏனை மூவரும் வேதவாக்கியங்களிலே தத்தமக்குப் பொருந்துவன மாத்திரையே எடுத்துக்கொண்டு ஏனையவற்றிற்குப் பிரமாணங் கொள்ளாமையானும், வேதபாகிய நூல்களைப் பிரமாணமெனக் கோடலானும், இவ்வறுவருஞ் சிவாகம நிந்தகராதலானும், இவர்சமயம் புறச்சமயமென வேறுவைத்தெண்ணப்பட்டன."

௩. "பாசுபதன், மகாவிரதன், காபாலன், வாமன், வைரவன் என்னும் ஐவரும் வேதஞ் சிவாகமமென்னும் இரண்டையும் பொதுவகையாற் பிரமாணங்கொள்ளினும், அவ்விரண்டிற்கும் புறமாகிய பாசுபத முதலியநூல்கட்குச் சிறப்புவகையாற் பிரமாணங்கோடலானும், வேதசிவாகமங்களால் விலக்கப்பட்டனவற்றை ஆசரித்தலானும், ஐக்கியவாதசைவர் வேதசிவாகமங்களைச் சிறப்புவகையாற் பிரமாணங்கொண்டு அவற்றின் விலக்கியன ஒழித்து விதித்தவழி ஒழுகுவாராயினும், எல்லாப்பெருங்கேட்டிற்கும் மூலகாரணமாகிய ஆணவமலத்துண்மை கொள்ளாமையானும், அதனுண்மைசாதிக்கும் சிவாகமவாக்கியங்களை இகழ்தலானும், அவ்வறுவகைச்சமயமும் அகப்புறச்சமயமென வேறுவைத்தெண்ணப்பட்டன."

௪. 'பாஷாணவாதசைவர், பேதவாதசைவர், சிவசமவாதசைவர், சங்கிராந்தவாதசைவர், ஈசுரவிகாரவாதசைவர், சிவாத்துவிதசைவரென்னும் அறுவரும் பொருளுண்மையெல்லாம் சித்தாந்தசைவரோடொப்பக் கொள்ளும் அந்தரங்கவுரிமையுடையராயினும், அவ்வப்பொருள்கட்குக் கூறும் தன்னியல்பு பொதுவியல்பு மாத்திரையில் முரணுதலால் அ

...dvocate Allegakoen defended ...used. The jury brought in a verdict of ...y of the capital offence and the prisoner was sentenced by the Chief Justice to undergo the extreme penalty of the law; and in doing so His Lordship was visibly much affected.

The prisoner in case No. 14 was then put in the dock, a lad of sixteen years from Karativu and charged with theft. An English speaking jury was called to try this case. Mr. Advocate Muttyah defended the açcused. The complainant was the father of the accused. The boy admitted that he took away a certain sum of money and some jewellery from the house of his father where he also resided, as they were his own property and as he was illtreated by his father and his step-mother. This Case was not concluded on the 15th and adjourned for the next day.

On the 6th the trial of the Karaitivu theft case was resumed and ended in the acquittal of the accused.

Case No. 3 from Chavakacheri was then taken up. Five persons were charged (1) with rioting with deadly weapons, (2) theft and (3) causing grievous hurt while committing theft. An English speaking jury with Mr. Mailvaganam as foreman was called to try this case. Mr. Advocate Kanagasabai defended the accused, who were all, except the fifth, convicted of simple riot; sentence being reserved they were on the 19th instant sentenced to six months' rigorous imprisonment each.

From the 19th instant a fresh panel of Jurors were in attendance. Case No 4 from Point Pedro was taken up before an English speaking Jury of which Mr. Alex Toussaint was foreman. There were six prisoners, the first being charged with forgery and the rest with aiding and abetting the first in committing forgery. Mr. Nagalingam appeared for the 1st 2nd 4th 5th and 6th accussed, and Mr. Kanagasabai for the 3rd accused. This was the most intricate and interesting case of the sessions. It appeared that one Valu Kantappen of Puloly West purchased in 1883 and 1885 one-sixth share of a piece of land at Puloly West. This share of the land was again transfered in 1893 by the first prisoner who is also known by the name of Valu Kantappen and lives in Puloly West to the second prisoner, the 4th, 5th, and 6th accused being attesting witnesses to the transfer deed. The Crown led witnesses to prove that the Kantappen who purchased the shares of the land in 1883 and 1885 died at the end of 1885 and that the transfer of 1893 by the first accused was a forgery. The whole day was occupied with the examination and cross-examination of the prosecution witnesses, at the close of which the Chief Justice directed the Jury to acquit the 3rd accused as there was no evidence against him and adjournd the further hearing for the next day.

On the 20th instant the trial of the case was resumed and Mr. Nagalingam made a lengthy and earnest address on behalf of his clients and called five witnesses to prove that the Valu Kantappen mentioned in the tittle deeds of 1883 and 1885, was the first accused in the case. These witnesses included one of the orginal vendors of the land and some of the attesting witnesses to the tittle deeds in favour of Valu Kantappen. Mr. Cook having replied, His Lordship summed up the case in his usual clear and lucid style. The Jury retired and brought in a verdict of guilty against the first accused only and acquitted the rest. The Judge expressed his concurrence with the verdict and sentenced the prisoner to pay a fine of Rs. 500 or in default to undergo six months' imprisonment.

Another case was disposed of on the 20th Inst, the Chillalai riot case, in which there were 13 accused. Mr. Nagalingam appeared for all the accused. An English speaking jury with Mr. Melville Geddes as foreman tried this case. All the accused were acquited and discharged.

The whole of the 21st Inst. was occupied with the trial of a case of high way robbery in which ten men of Anaicottai belonging to the Channa caste were charged. One of them having died the very morning nine were put in the dock. Mr. Kanagasabai instructed by Mr. Casippillai appeared for all the accused. The story of the prosecution was that seven Palla women, retail dealers in the Grand Bazaar, were, on the night of the 12th July on their way home, robbed of ...verything they posssseed, including their Thalis ... necklaces, leaving only their earings ... it was dark they recognized the accused ... from their voice. The name of all ... Though ... not ... sed chiefly ... the accused were ... Vedhan of Anaicotta... the next day. The Judg... Mr. Alex Toussant was fo...

...belived the complainants and their witnesses, an... the jury at 5-40. P. M without retiring retur... ed a verdict unamously in favour of the acc... There was little doubt in the mind ... Jurors that this case was concocted with the assistance of the local Headmen by these bazaar women in order to pay off old grudge.

There remains only one case more to be disposed of—the Paranthan theft case, the *cause cebelre* of the sessions, in which a son of the well known ex-Udayar of Chavakacheri, is the first accused. It will be taken up tomorrow and the sessions closed.

LOCAL AND GENERAL.

Weather—The paddy plants in all parts of the district except Poonaryn and Maravanpulavu wither away for want of rain. There has been no rain for the last six weeks or so A shower at least now will be of considerable benefit to the crop. Although this is the usual harvesting season the plants are everywhere green and just in ears, as the sowing took place nearly two months after the normal time on account of the lateness of the last winter rains. The prospects of the crop are indeed very gloomy and the farmers do not expect to realize even one fourth of the normal crop.

Cholera—Two coast moormen, one of whom was a new arrival from India, died of cholera last week near the Grand Bazaar. But thanks to the prompt measures adopted by the medical authorities no fresh cases have occured. The locality is now kept very clean and disinfected.

Obituary—We deeply regret to have to record the death of Mr Nathan Strong, father of Dr. Strong Arasacone Mudaliyar, at the age of 77 years, which took place at Manipay on the 14th Inst He was well known throughout Jaffna as the proprietor of the Morning Star Press and was highly respected by the community.

Examination—The Entrance Examination of the Calcutta University was held in Jaffna commencing from the 14th Inst. There appeared form this centre 66 students, 40 from the Jaffna College, 13 from the Hindu High School, 6 from Chundicully and 7 appeared as private students. We are glad that five out of 8 students sent in from the Jaffna Wesleyan Central College for the Madras Matriculation Examination have come off successful.

Pilgrimage to Rameswaram—We understand that among the pilgrims who died at Rameswaram of cholera was Mr. Chinniah Mailvaganam, Notary public of Puttoor, Jaffna. He was a near relation of the Maniagar of Valligamo East and had a very extensive practice. The pilgrims who went there from here have not all yet returned and great anxiety is felt by their friends and relatives. For fear of the quarantine regulations now in force here steamers refused to take them to Jaffna. The vast majority have gone to Negapatam by land from Paumbun to come here by Kalladhony via Pt Calmere. Some have already returned via Mannar.

—The Railway from Polgawala to Kurunagala was opened on the 14th instant by His Excelleney the Governor. In reply to the address presented to him by the public he is reported to have made remarks referring to the Jaffna Railway in very reassuring terms. We hope the Jaffna Railway Committee will now bestir themselves in the matter.

TAMIL Vs ENGLISH.

(*Communicated.*)

The Revd Dr. Howland, the American Missionary at Batticotta, took occasion, in the course of a long speech at the recent distribution of prizes to the students of St. John's College, Chundicully, to compare the Tamil and English languages by placing them in juxtaposition.

Speaking of the Tamil language, he said that it was full, rich and expressive; but at the same time it was cumbrous, corrupted and defiled. It was defective in many respects. Its orthography was unsatisfactory. As an instance in point, he invited the attention of the audience to the Tamil Geography taught in our schools, observing that a whole legion of English Geographical names were spelt in such queer and outlandish fashion. as to jar on one's ears. This evidently showed that the alphabet of the Tamil language was very defective. Great difficulty, he said, was experienced in rendering English into Tamil. There were passages in the Tamil Bible which had not been properly translated. There were many words in it which the speaker said should not be there; but those words could not have been avoided as the language itself lacked the proper and necessary words. The Tamil scrip was rather ponderous. The language could not be written so easily or so quickly as English. It required more space to put together the same a...nt of thought in Tamil than in English. The ... invented a certain mode of writing ...peedy and expeditious manner but nobody ...im credit for the invention, or recognise ...t. So he had to give up his efforts as hope-

...glish, on the other hand, he said, was a fine lan... It was full, rich and expressive; it was sonorous ..., flexible and liquid. The only defect in it ...it had a bad spelling. This was a necessary ...n, but it went a great way to help and strengthen the memory by galvanizing the atttention of the student to words of the same pronounciation, but of different spelling. English literature was one of the best and noblest to be found in the whole compass of human language. There were in it works of the highest merit in every department of science and art. English was at present the language of commerce. It was spoken by nearly half the population of the world. The language had grown and developed and become perfected by centuries of incessant labour and culture by master-minds. This mighty development and extensive use of the language were due to the fact of its being a Christian language. The languages in which the Holy Scriptures were originally written had become dead languages. The object of education, Dr. Howland proceeded, was to enable man to attain the highest degree of perfection and this end was to be gained only by the propagation of Christianity. Now as English was spreading through every land and as English was a living language and as the Holy Scriptures had been translated and preached in the English language to a much larger extent than in any other language, the speaker was jubilant over the fact that in the near future, when the time came, all the nations of the world would speak in one language and that language he hoped would be the English language.

Comparisons, they say, are generally odious; and Dr. Howland would have done well had he steered clear of that rock. He may be a proficient in English and he was welcome to grow warm or wax eloquent over a language which is his mother language as he may affectionately call it. But I greatly doubt whether his attainments in Tamil are such as to entitle him to sit in judgment on a langnage which was great, refined and polished, which had a literature full of erudite and profound treatises in the domains of science and art and which was spoken and written in its highest excellence long before the English had a written character. In support of these observations I beg to quote the following few lines from the preface to the Tamil and English Dictionary of Professor Winslow (Edition of 1862).

"The Tamil is not a vulgar dialect. Before the principal basis of the English had a written character, it was a highly polished language. Its name signifies sweetness and though not so musical as the Telugu, in its poetic form especially, it is not without its claim to euphonic charms, and "linked sweetness". Unlike several of the vernaculars of India, it is not, as some have supposed, a daughter of the Sanskrit. Its alphabet differs not only in character but in sound, and is more limited * * * * Dr. Caldwell has well said, "the Tamil, the most cultivated AB-INTRA of all the Dravidian idioms can dispense with the Sanskrit altogether if need be, and not only stand alone but flourish without its aid". It is certain that Tamil could do without Sanskrit much better than English without Latin * * * Undoubtedly the Brahmans improved their dialects and taught them, (the aboriginal tribes) much of useful art and science; but by bringing them under the influence of the Puranic system of idolatry they shackled their intellects, perverted their moral sense and bound them fast to error by the chains of caste. The reason why Tamil is more independent of Sanskrit than the Northern languages and even than the other Dravidian tongues, is that it has not been left like those principally to the cultivation of the Brahmins".

Dr. Howland said that there were words in the Tamil Bible which should not be there. What is his authority for saying this? Were all the Tamil scholars in India and Ceylon consulted when the Bible was translated or subsequently when revisions of it were made? Will the reverend gentleman guarantee that the English Bible contains accurate and exact synonyms for all the important and technical terms in the Hebrew and Greek versions? When the translation of the Bible in Tamil was first undertaken in Jaffna, the late Arumuga Navalar, unquestionably an able and distinguished Tamil and Sanskrit scholar, was on the staff of the Translators. The passage "I was young, I am old, but never had I known the righteous man forsaken or his posterity beg for bread," had to be translated. The Navalar rendered the last five words into the following Tamil "அவன் சந்ததி அன்னம் இரந்ததையும் அறிந்திலன்". Exception was taken to the word "அன்னம்" by the European Ministers and the word "அப்பம்" was substituted. Now what bread is to the Europeans, rice is to the Tamils; and any intelligent man with even a moderate acquaintance with the Tamil language will uphold the Navalar's translation. As in this so in innumerable other instances errors and imperfections may have crept in.

With regard to what Dr. Howland said on the English language, I confess I am not competent to express an opinion. But I cannot go along with him in saying that the English language spreads and propogates itself because it is a Christian language. To my thinking English extends and develops itself and is being spoken and written by millions of human beings not because it is a Christian language but because it is the language of a ruling race which has succeeded in subduing large tracts of country in both hemispheres, and whose dominion extends over a territory so vast that it has been well said that on it the sun never sets. It is the language of a power or rather of two powers, one in the old and the other in the new world, which have conquered and are still conquering and as they get into new lands introduce their language also. It is the power and influence exercised by the nation that make the people subject to it learn its language. I would be the last man to forego the advantages and benefits flowing from British justice and administration, but if to-day the English were to quit the Colony and some other power come in, would there be the same zeal, activity and rivalry as is displayed in English education by Dr. Howland and a host of others? Let Dr. Howland answer. He dare not deny that English would in no long time be forgotten, as the Dutch now is.

☞ Printed and Published by V. Chuppiramania Pillai for the Proprietor at the Saivaprakasa Yantra Office Jaffna.

வர் சமயம் அகச்சமயமென வேறுவைத்தெ[ண்ணப்]பட்டன.

௫. வைதிகசைவர்க்குரிய வேதாகமோக்த... அகாரமுதலிய வியஷ்டிப்பிரணவ மூன்றையுமொட்டி நிற்பன ஆன்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் என்னும் மூன்றுமாம்.

௩௬. சிவம் ௩௫. சத்தி ௩௪. சாதாக்கியம் ௩௩. ஈசுரம் ௩௨. சுத்தவித்தை	இவ்வைந்தும் பிரேரகாண்டமெனவும், சிவதத்துவமெனவும், சுத்தமாயாதத்துவமெனவும் படும்.
௩௧. அசுத்தமாயை ௩௦. கலை ௨௯. காலம் ௨௮. நியதி ௨௭. வித்தை ௨௬. ராகம் ௨௫. புருடன்	இவ்வேழும் போககாண்டமெனவும், வித்தியா தத்துவமெனவும், சுத்தாசுத்த மெனவும்படும்

பிரகிருதியிலிருந்து, (குணம்), புத்தி(௨௪), அகங்காரம் (௨௩), மனம் (௨௨), சித்தம்(௨௧) என்னும் அந்தக்கரணங்களுன்கும், சோத்திரம் (௨௦), துவக்கு (௧௯), சட்சு (௧௮), சிங்குவை (௧௭), ஆக்கிராணம் (௧௬) என்னும் ஞானேந்திரியமைந்தும், வாக்கு (௧௫), பாதம் (௧௪), பாணி (௧௩), பாயு (௧௨), உபஸ்தம் (௧௧) என்னுங் கன்மேந்திரியமைந்தும், சப்தம்(௧௦), பரிசம்(௯), ரூபம்(௮), ரசம்(௭), கந்தம்(௬) என்னும் தன்மாத்திரையைந்தும், ஆகாயம்(௫), வாயு(௪), தேயு(௩), அப்பு(௨), பிருதிவி(௧) என்னும் பூதமைந்துமாக (௨௪) தத்துவமும் போசியகாண்டமெனவும், ஆன்ம தத்துவமெனவும், அசுத்ததத்துவமெனவும்படும். மூலகைத் தத்துவங்களிலுமுப்பத்தாறு தத்துவங்களுள்ளனவாம்.

௬. புறப்புறச்சமயத்து உலோகாயதமுதல் அகப்புறச்சமயத்து ஐக்கியவாத சைவமீறுகிய புறப்புறச்சமயமும் புறச்சமயமும் அகப்புறச்சமயமுமா என்னுமெண்கூற்றுச் சமயத்தெய்வங்களெல்லாம் பூதமுதல் (௩௬) தத்துவாதீதத்திலுமேறு இவ்வொருதத்துவங்களிலே நிலைபெறுவனவேயாக, உண்மைத்தன்மை விளக்குகின்ற சைவமெனப்படும் பாடாணவாதமுதலிய அகச்சமயபேதங்களுக்கு இலயம் போகம் அதிகாரம் என்னும் மூன்றலத்தையுமுறுதிச் சிவன் சதாசிவன் மகேசன் என்னும் பெயருடைய தடத்தக்குறியே குறியாகவுடைத்தாயும், அத்தடத்தக்குறியே யன்றி வேதாகமங்களின் சுருதிமுடிபாய், உயிர்கட்கெல்லாம் உயிராய் நின்று ஞான இச்சாக் கிரியைகளைப் பிறப்பிக்கும் அம்மையப்பனுகி, எவ்விடத்தும் எக்காலத்தும் செறிந்து வியாபகமாய் நின்ற சிவபிரானுடைய ஞானசத்தி கிரியாசத்தி என்னும் இரண்டு திருவடிகளைத் தமமுடைய ஞானசத்தி கிரியாசத்திகளுக்கு வியாபகமாகக்கொண்டு, ஞாலேபோலவும் காற்லேபோலவும் அடங்கிநிற்பவர் வைதிகசைவ சுத்தாத்துவித சைவசித்தாந்திகளேயாம்.

இந்தச் சைவசித்தாந்திகள் முழுப்பிரமாணமாகக் கொண்ட வேதம் சிவாகமம் என்னும் இரண்டினுள்ளே, ஆகமத்தைச் சிதம்பரம் 'பிரம வித்தியாப் பத்திராதிபரும்' ஸ்ரீசிதம்பரத்து 'ராமசாஸ்திரியாரும்' முறையே 'பிரவித்தியாப் பத்திரிக்கை' வைதிகாச்சாசமீமாஞ்சை' என்பன வாயிலாகவும், சைவசித்தாந்த தெறியை, சென்னை 'அத்வைதசித்தாந்தி' என்பார் 'வேதாந்த சங்கைநிவாரணி' 'சித்தாந்திகளும் எகான்ம வாதிகளே' என்பன முதலிய பிரதிகளாலும், ஆக்ஷேபித்தமையாலும், ஆக்ஷேபிக்கின்றமையாலும், அவற்றசெல்லாம் ஒருபிரகாரம் சுருக்கமுற விடையளித்தல் கடமையாமென்று கருதித் திருவருளை முன்னிட்டு இவ்விஷயத்தை எழுதவேண்டியதேனை

வைதிக சைவம்.

எ. வேதம் உணர்த்தற்கருவியெனவும், ஆகமம் மூன்றும் உணர்தற்குரிய வருவிதற்குங் கருவியெனவும் பொருள்படும்; படவே, வேதபுருஷனுக்கு யசுர்வேதம் சிரசென்றும், இருக்குவேதம் வலப்பக்கமென்றும், சாமவேதம் இடப்பக்கமென்றும், அதர்வணம் புச்சமென்றும், தைத்திரீய பிரமாணக்தலவ்லியிலே சொல்லப்படுதலால், சிரத்தானத்தமைந்த யசுர்வேதம் மற்றைய அங்கங்களாயமைந்த இருக்குமுதலிய மூன்று வேதங்களினும் சிறப்புற்று நிற்கும். நிற்கவே, பிராமணர்முதலிய முதன் மூவாணத்தாருடைய வைதிககருமங்களுக்கு உயிராய் வேதங்கள் எங்கும் காணப்படினும், முதற்கண்ணே இருக்குவேதத்திலே, ஐந்தாம் அஷ்டகத்திலே, அறுபத்திரண்டாம் சூக்தத்திலே, பத்தாம் மந்திரமாகக் காணப்படும் காயத்திரியானது, நாராயணோபநிடதத்திலே கண்டவாறு கருடன், பிரமன், இரணியகருப்பன், நாராயணன், நரசிம்மம முதலிய பலதேவர்கட்கெல்லாம் சிற்சில சப்தவேறுபாட்டோடு இடங்கொடுத்தும், பிரமசமாசம் ஆரியசமாசமுதலிய நவீன சமயிகளுக்கும் பொருள்கொள்ள இடங்கொடுத்தும் நிற்பதேயாக.

"சொற்கோவுந்தோணிபுரத்தோன்றலுமென்சுந்தரனுஞ்
சிற்கோலவாதவூர்த்தேசிகனு—முற்கோலி [ங்]
வந்திலரேனீறெங்கேமாமறைநூலெங்கே
யெந்தைபிரானைந்தெழுத்தெங்கே."

என்றவாறு, தமிழ்நாடு செய்த புண்ணியப்பயனுய்த் திருவவதாரஞ்செய்தருளிய பரமாசாரிய சுவாமிகளாகிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தர மூர்த்திநாயனார், மாணிக்க வாசகசுவாமிகளென்னும் நால்வருள்ளே, திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் சகல மந்திரங்களெல்லாந் தோன்றுதற்கு முதலாகும் முதல்வனார் ஸ்ரீபஞ்சாக்ஷரமென்பாராய், அம்மந்திரங்களுக்கெல்லாந் தலைமையாய் அந்திசந்தோறும் தவறாது செபிக்கப்படும் காயத்திரியின் பொருள் ஸ்ரீபஞ்சாக்ஷரமென்ற உண்மையை அமைத்து, 'அந்தியுள்மந்திர மைந்தெழுத்துமே' என்று தமது யஞ்ஞோப வீததாரணகாலத்தில் அருளிய ...ருப்பதிகத்துக் கிசைவுற, யசுர்வேதமானது அக்கா...த்திரியின் பொருள் இதுவாமென்று தன்னிதயத்து... ஜீவரத்தினமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைப் ...தந்தமையால், இருக்குச் சாமம் அதர்வணமென்னு... மூன்றும் வேதமேயாக, யசுர்வேதம் ஆகமமாகச் சிறந்து நின்றேங்கும்.

(வரும்)

சமாசாரம்.

காலநிலை—வெய்யிலும் பனியும் அதிகம். மழை மோசஞ் செய்து விட்டது. அநேகவிடங்களில் நெற்பயிர்கள் கரிந்துபோனதினுல் அறுத்து மாடுகளுக்குப் போடுகிருர்கள். மழையை நம்பிப் பயிர் வாங்கி நட்டுக் கஷ்டப்பட்டவர்களுக்கு இருமடங்கு நஷ்டமே.

பரிசளித்தல்—திருநெல்வேலி வைத்தியர் ஸ்ரீ. முத்துத்தம்பிப்பிள்ளையுடைய 'சிவஞானதான வித்தியாசாலை'யில் வருகிற ௨0வை வெள்ளிக்கிழமை பிள்ளைகளுக்குப் பரிசுகள் கொடுக்கப்படும்.

பேதி—வண்ணுர்பண்ணையில் கடைத்தெருவில் இரண்டு மகமதியர் இக்நோயாலிறந்தனர். அரசினருடைய முயற்சியால் வேறொருவருக்கும் உண்டாகவில்லை. சிவன்கோயிலில் இதற்காக மகா மாரியம்மனுக்கு உற்சவம் நடக்கின்றது.

பழைய வீமன்காம உடையார்வேலை—இவ்வேலை ஸ்ரீ கு. சின்னத்தம்பி உடையாருடைய தம்பி ஸ்ரீ. பொன்னம்பலத்துக்கு ஆயிருக்கின்றதென்று கேள்விப்படுகிறோம்.

குருபூசை — கந்தசுவாமிகோயிற் றெற்குவீதிக் கார்த்திகைமடத்தில் தை மாசத்தில் கண்ணப்பநாயனர், சண்டேசுரநாயனர், திருநீலகண்டநாயனர், கலிக்கம்பநாயனர் என்னும் நால்வர் குருபூசையும், முறையே, குலசேகரசுந்தரதாசர், சி. பொன்னையா, வி. கா. சிவகுருநாதர், வ. ஆறுமுகர் என்பவர்களாலும், அரிவாட்டாயநாயனர் அப்பூதியடிகளுயனர் என்பவர் குருபூசை பிடியரிசிவரவாலும் நடத்தப்பட்டன.

தானவரவுகள்—ஸ்ரீ. த. இராகவப்பிள்ளை தம்முடைய மகள் முறைப்பட்ட நாகம்மாளுடைய அபரக்கிரியையில் செய்த தானம் இரண்டு ரூபாவும், ஸ்ரீ. கே. சோமசுந்தர ஐயர் சிவபூசை எழுந்தருளப்பண்ணிக் கொண்டபோது செய்த தானம் ஒன்றரைரூபாவும், ஸ்ரீ. ஆ. சுப்பிரமணியப்பிள்ளையுடைய மகனுக்கும், தஞ்சாவூர் டிப்டிக்கலெக்டர் ஸ்ரீ. சு. முருகேசம்பிள்ளையுடைய புத்திரிக்கும் நடந்த விவாகத்திற்செய்த தானம் ரூபா ஐந்தும் சைவபரிபாலன சபைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

ஐபவருஷவாக்கியபஞ்சாங்கம்:— 'இரகுநாதையர் சோதிடபரிபாலன மடத்துவாக்கியபஞ்சாங்கம்'வெளிவந்துவிட்டது. இது இம்முறை முற்பகுதி ஸ்ரீமத் இரகுநாதையரவர்களாலும், பிற்பகுதி ஸ்ரீமத் வி. சபாபதிஐயரவர்களாலும் கணிக்கப்பட்டது.

பின்னென்று:—தம்பளை ஸ்ரீ பெ. வேற்பிள்ளைச் சோதிடரால் கணிக்கப்பட்ட 'ஜயவருஷ ஸௌரமான வாக்கியபஞ்சாங்கம்' என வொன்றும் வெளிப்பட்டது. இதிற் கியாச்சியமில்லை. இரண்டிற்குஞ் சிலவிதிவாசங்களுளவே யாயினும், வெளிவடிவம் இரகுநாதையருடைய சென்ற வருஷத்துப் பஞ்சாங்கம்போலவே அச்சிடப்பட்டிருக்கின்றது. இரண்டுபஞ்சாங்கங்களும் விலையொன்றே. இரண்டும் நமக்கனுப்பப் பட்டிருக்கின்றன.

றெயில்வரும்படி—இலங்கையில் ௧௮௯௨ம் வருஷத்திலும் ௧௮௯௩ம் வருஷத்தில் ௨,௯௭,௯௯ ரூபா அதிகமாம்.

--குருநாகல்லுக்குச் சென்ற ௧௪வ முதலாக றெயில்போகின்றது. அன்று அவ்வூரார் தேசாதிபதிக்குத் துதிசெய்தபோது, அவர், இது, யாழ்ப்பாணம் திரிகோணமலை என்னுமிடங்களுக்குப் போகவிருக்கும் றெயிலுக்கு ஆரம்பமாகும் என்றார்.

தந்திச்செலவு—இந்தியாவும் பிரமதேசமுமல்லாத பிறதேசங்கட்கு அனுப்பும் தந்திகளுக்குச் சொல்லொன்றுக்குப் பதினுறுசதங் கூட்டியிருக்கிருர்கள். இந்தியவரசினரும், இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு அனுப்பப்படும் ஒவ்வொருசொல்லுக்கும் ௩ ரூபா. ௭ அணு வீதமாகவும் ௩. ௨. வீதமாகவும் ஏற்றியிருக்கிருர்கள்.

'சிலோன் ஸ்றீட் ஷிப் கம்பனி'—இக்கம்பனியின் காரியகாரராயிருக்கும் ஸ்ரீ. கனகரத்தினம் (Lawton) என்பவரை அவ்வேலையினின்று விலகிக்கொள்ளும்படியும் அந்தவிடத்துக்கு மெஸ் மாதர் என்பவர் வருகிறுரென்றும் கடிதம் வந்திருக்கிறதாக அறிகிறோம். மாதரென்பவரும் முன் சிலகாலம் இவ்வேலை பார்த்தவராயினும், கனகரத்தினமென்பவர்போல் எல்லோர்க்குந் திருப்திகரமாயும் கம்பனிக்கு வரும்படி வரத்தக்கதாயும் நடத்துவாரென்று நம்ப இடமில்லை. கனகரத்தினத்துக்கு உள்ள செல்வாக்கு இவருக்கு இல்லை. கம்பனியாரால் தாம் அடைந்த நட்டத்தை இன்னும் கனகரத்தினம் எடாமையால், இவரை நியாயமின்றி இவ்வளவில் வேலையினின்றும் விலகிக்கொள்ளும்படி சொல்வது கம்பனிக்குச் சிறப்பன்று.

—சென்னபட்டணத்தில் ஒருநீதிபதி நாலு அணு திருடின ஒருவனுக்கு ஆறுமாசக் கடுஞ்சிறை விதித்தார். எதிரி இதற்குமுன் ஒருதரமும் நீதித்தலங் காணுதவனும்.

—அமரிக்காவை ஆதியிற் கண்டுபிடிக்க உண்டான செலவு ஆயிரத்தைஞ்ஞூறு பவுனென ...மதிக்கப்படுகின்றது. கலம்பசுக்கு வருஷம் ௬௪ பவு... மாரிருவர்க்கும் தனித்தனி ௬௦ பவுனும், ...களுக்கு மாசம் நாலரைச் சிலிங்கும் (... கொடுக்கப்பட்டதாம்.

கடிதம்.

சூனியோபாதானசிருட்டி.

முடிபு.

(௬௩ம் பக்கத் தொடர்)

௭. கடவுள் உலகசிருட்டிப்பொருட்டு யாதொருபொருளை உபாதானமாகக்கொண்டாரெனின், அப்பொருளுங்கடவுளை ஒப்ப அநாதிநித்தியம் எனப்பட்டு, ஈச்சுரலக்கணத்துக்கோர் இழுக்கைகாட்டிவிடுமென்று நமது நண்பர்பெரிதும் அஞ்சுகின்றார். ஈதெல்லாம் கடவுளிலக்கணமுறையை உள்ளபடி அறியாமையால் விளைந்தவிபரீதங்களாம். கடவுளுடையமுக்கியலக்கணங்கள் எனை எவை? அவை ஒருநற்கொன்று கொண்டுளசம்பந்தம் என்னை? அவ்விலக்கணங்கள் கடவுட்குவேண்டப்படுதல்யாதுபற்றி? என்னும் இவ்விசாரம் நமது நண்பரிடத்துண்டாமெனின், அவர் இங்ஙனம்மலைவுற்றலேயார். அவர் என்செய்வர்! அவரதுசமயத்திலே இவ்வுண்மைகளை விளக்கிக்காட்டும் சாத்திரங்கள் இல்லையே.

கடவுள் அநாதிநித்தியர் என்பது சத்தியம். இது அவரது முக்கியகுணங்களுள் ஒன்று? ஆமெனின் யாதுபற்றி? இல்லையெனின் அவ்விலக்கணம் பிறிதொருபொருட்கு அமைவதனுல் பெறப்படும் இழுக்கென்னை? கடவுளிடத்துள்ள எந்தஎந்த இலக்கணமும் பிறிதபொருள்களிற் காணப்படுதல்கூடாதென்பதோ நமதுநேசரதுவாதம்? இங்ஙனமாதல் கடவுளிடத்துக் காணப்படும் சத்து,சித்து, நித்தியம்முதலிய பல இலக்கணங்கள், அவரதுசமயக் கொள்கைப்படி ஆன்மாக்கட்கு முண்டன்றே. இவற்றின் பொதுமையால் பங்கப்படாத கடவுளிலக்கணம அநாதிலக்கணப்பொதுமையால் பங்கப்பட்டு விடுமாமோ? இனி காலம்[Time] இடம்[Space] முதலியவெல்லாம் அநாதி நித்தியமன்றே. இவற்றால் கடவுளிலக்கணம் பங்கப்பட்டுவிடுமாமோ? இனிஒருபொருள் அநாதிநித்தியம் என்றதனையானே, அவனிடத்தே அநாதிபோதம் அநந்தசத்தி, அளுப்தசத்தி, சருவஞ்ஞதை, திருப்தி, சுவதந்திரத்துவம், எனப்படும் அறுகுணங்களும் வந்தடைந்துவிடுமேயோ? இவையெல்லாம் அநாதிநித்தியலக்கணத்தோடு காரணகாரியசம்பந்த முடையனவாமோ? இந்த அறுகுணங்களுமன்றே கடவுளை எப்பொருட்குமிறைஎன வைக்குந்தகையன? இந்த இலக்கணங்கள் பிறபொருள்களிற் காணப்படினன்றே கடவுளிலக்கணம்பங்கப்படுமாறுளது. இவை ஒழிந்தபிறசாமானிய குணங்கள் எந்தஎந்தப்பொருளிற்றான் காணப்படினும் அதுகொண்டு கடவுட்காவது அவரதிவ்வியலக்கணங்கட்காவது யாதானுமோர் இழுக்கு எக்காலத்தும் அமைதல் இல்லையென்பதை நமதுநேசர் விளங்கிக்கொள்க. இங்ஙனமின்றி அநாதி நித்தியம் என்பது நமதுநண்பருக்கோர் வியப்புக்குரிய சொல்லாதல்பற்றி இதுபோன்றதெல்லாம் கடவுட்கே உரியனஎன்று அவர் நிறுத்தக்கருதுதல் சிறுர்ஆடலேசிகர்க்குமெனவிடுக்க.

அரசன்ஒருவன் சர்வபராக்கிரமசாலி என்றால் அவன்கீழ் படைகுடி கூழ்அமைச்சு ஒன்றும் இருத்தல்கூடாதோ? கடவுள்சர்வசாமர்த்தியர் என்றால் அவரை ஒழிந்து பிறிதொருபொருள் இருத்தல்கூடாதோ? அவரை ஒழிந்தபிறபொருள்களுமுண்டாயிற்றனே அவர்சர்வசாமர்த்தியர் என்னப்படுவர் என்பதைநமதுநேசர் உணர்ந்துணர்கின்றரில்லை. அரசன் முடியிழக்கப் பின்னெருவன் பட்டத்துக்குவாராறு என நமதுநண்பர் உசாவுகின்றார். அவன்வந்தால்என் வாராதொழிந்தால்என்? அதுகொண்டு நாம்எடுத்துக்கொண்ட நியாயத்துக்கு எய்தற்பாலதோர் இழுக்கென்னையோ? அந்தவேந்தன் முடிகவித்தரசாளுந்துணையும் அவன்கீழ்யார் ஒருவரும் இருத்தல்கூடாதோ என்பதேநாம் கேட்டுநிற்பது. அதுபோலக்கடவுள் சர்வசாமர்த்தியராய் விளங்குங்காறும்(எப்போதும்)அவருக்குக்கீழ் யாதொரு பொருள் இருத்தல்கூடாதோ? கூடும் கூடும். இனிதுகூடும். இங்ஙனம் இருத்தல் கூடியதோர்பொருளிலிருந்துசெகம் சிருட்டிக்கப்பட்டது என்பதே யுத்திக்கிசைவுடைத்து.

அ. இனித்தமது சமயக்கடவுள் சூனியோபாதானமாகசெகத்தைச்சிருட்டித்தார் என்னும் கூற்றைநிறுத்தவந்த நமதுநண்பர், அக்கூற்றைமறுத்தற்பொருட்டு நாம்எடுத்துக்கொண்ட நியாயங்களோடு எதிர்க்குமாற்றலின்றி அவற்றைவிடுத்து நமதுசைவசமயக் கூற்றினுள்ளேபுக்குமாள்கின்றார். சைவசமயக்கொள்கைகள் அங்ஙனமிருத்தல்பற்றி அவரது சமயக்கூற்றுத் திரப்பட்டுவிடமாட்டாது. நியாயங்கொண்டே அதுநிரப்படுதல்வேண்டும் அங்ஙனம் நியாயங்காட்டவாற்றாது'மாற்றுநெடி' யிட்டுக் காட்டுதல் அறிவுடையார்க் கழகாகாது.

சைவசமயத்துப்பிரதிபாதிக்கப்படும், பஞ்சகிருத்தியமுறைஇன்னது பதார்த்தத்திரயங்களின் அநாதிநித்தியதத்துவமுறைஇன்னது பாசக்கழற்சி இங்ஙனம், ஆன்மாக்களின் இயற்கைநிலைஇன்னது,சிவபெருமானகொண்ட அருட்டிருமேனிகள் இவ்வியல்பின என்பதை நமதுநேசர் படித்தற்கு இன்னும்பல நெடுங்காலம் செல்லும்.அவற்றை அவர்க்கெடுத்துக்காட்டுதல் மற்றொன்றுவிரித்தலாகும்.இவை சைவோத்தரத்தில்விரித்து வித்தரிக்கப்பட்டுள்ளன.

இப்போது அவற்றுள்ளேநமதுநேசர்புக் கிடர்ப்படாது தமதுசமயக்கொள்கையை நியாயங்கொண்டு நிறுத்தல்வேண்டும்.இஃதியலாது நாம்தக்கநியாயங்கொண்டு அக்கொள்கையைக் கண்டித்தவழியும் அந்நியாயங்களை நிராகரிக்குமாற்றலாவது, அவற்றைஒத்துக்கோடற்கியைந்த சித்தசமாதானமாவது இன்றிநின்றுலேவரென்றால் 'கற்றபின்னிற்க அதற்குத்தக' என்பதை ச்சித்திக்கவேண்டுபவர்யார்என்பதை அறிவுடைஉலகம் சொல்லுக.

...ண்மைகளை...

K. D.

...ளும் கொழும்புக் கிர்காம...
...தமும் மற்றமுறை வரும் ...